2. உரிமைப் பிரச்சினை.

அவை நிகழ்ச்சிகளைத் திரித்து மாலைமுரசு 5—2—1992 ஆம் நாளைய கோவைப் பதிப்பில் செய்தி வெளியிட்டிருப்பது குறித்து.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : உரிமைப் பிரச்சினை மாண்புமிகு உறுப்பினர் திரு. வி. பி. சந்திரசேகர் அவர்கள் மாலை முரசு பத்திரிகை மீது ஓர் உரிமைப் பிரச்சினையை என்னுடைய கவனத்திற்குக் கொடுத்திருக்கிறார். 5—2—1992— கோவை, மாலை முரசு பத்திரிகையில் முதல் பக்கத்தில், 'இளம்வழுதி தாக்கப்பட்டார்' என்ற தலைப்பின் கீழ் ஒரு செய்தியைப் பிரசுரித்து, அந்தச் செய்திக்குள்ளே 'பிராக்கெட்' போட்டு, பொள்ளாச்சி சந்திரசேகர் இளம்வழுதியின் கையல் அடித்தார் என்று பிரசுரித்துள்ள பிரச்சினையை, என்னுடைய கவனத்திற்கு உரிமைப் பிரச்சினையாக எழுப்ப வேண்டுமென்று கொடுத்து இருக்கிறார்.

மேலெழுந்தவாரியாகப் பார்க்கிறபொழுது, அது உரிமை மீறல் பிரச்சினையின் கீழ் வருவதோடு, வேண்டுமென்றே இந்த அவையில் நடக்காத ஒரு செய்தியை நடந்ததாகப் போட்டு, அதை ஓர் உறுப்பினர் செய்தார் என்றும் செய்தியை வெளியிட்டு இருப்பது எவ்வளவு கண்டிக்கத்தக்கது என்பதை இந்தச் செய்தியை வெளியிட்டிருக்கிற முறையைப் பார்த்தாலே, மாண்புமிகு உறுப்பினர்கள் தெரிந்து கொள்ள முடியும். இந்த அவையில் அவைத் தலைவருடைய கட்டளையையும் மீறி, இங்கே பல்வேறு வகைகளிலே முரண்டு பிடித்த ஓர் உறுப்பினர் வெளியேற்றப் பட்டிருக்கிறார். அந்தச் செய்தியை வெளியிடுகிறபோது, இதைப் போல நடக்காத ஒரு செய்தியை மாலை முரசு பத்திரிகை வெளியிட்டிருப்பது என்பது மிகவும் கண்டிக்கத்தக்க ஒரு செயல் என்பதை எடுத்த எடுப்பிலேயே நான் தெரிவிக்க விரும்புகிறேன்.

முற்பகல் 10-40

குறிப்பாக, இந்தப் பத்திரிகை கொஞ்ச நாட்களாகவே அவையில் நடைபெறாத சம்பவங்களை நடைபெற்றதாக இதைப்போல் திரித்துக் கூறுவதையே வாடிக்கையாகக் கொண்டிருப்பதை பல்வேறு சந்தர்ப்பங்களிலே மாண்புமிகு உறுப்பினர்கள் என்னுடைய கவனத்திற்குக் கொண்டு வந்திருக்கிறார்கள். பத்திரிகைகளைப் பொறுத்தமட்டில், இந்த அவையும், அரசாங்கமும் ஒரு ஜனநாயகக் கோட்பாட்டின்படி கருத்துச் சுதந்திரம் பெற்றிருக்கிற அமைப்புகள் என்று முழுமையாகக் கருதுகின்றன. மாண்புமிகு முதலமைச்சர் அவர்களே கூட இந்த அவையில் பல்வேறு சந்தர்ப்பங்களில், எங்கள் மீது இருக்கிற குற்றங் குறைகளைப் பத்திரிகைகளில் மிகத் துணிச்சலோடு

வெளியிடலாம் என்று பத்திரிகைகளைக் கேட்டுக் கொண்டிருக்கிறார்கள். எதிர்க் கட்சியினர் குறைந்த எண்ணிக்கையில் இருக்கிற இந்தச் சூழ்நிலையில் பத்திரிகையாளர்களுடைய அத்தகைய விமரிசனங்கள் கூட எங்களுக்குப் பெரிதும் பயன்படும். அதுதான் ஒரு ஜனநாயகக் கோட்பாடு என்று பல்வேறு சந்தர்ப்பங்களில் அவர்கள் தெரிவித்திருக்கின்றார்கள். நானும் பத்திரிகைகளைப் பொறுத்தமட்டில், இந்த அவையில் ஒரு அங்கம் என்கிற வகையில் , அவை உறுப்பினர்கள் பெற்றிருக்கிற உரிமைகளை, இங்கே இருக்கிற பத்திரிகையாளர்களும் பெறத்தக்க வகையில் பல்வேறு சந்தர்ப்பங்களில் நடந்து வந்திருக்கிறேன். இருந்தாலும், இதைப்போன்ற செய்தியை வெளியிடுவது என்பது மக்கள் மத்தியில் இந்த அவையின் மீது ஒரு தவறான எண்ணத்தை உருவாக்குகிற முயற்சியாக இருக்குமோ என்று கூட ஐயுற வேண்டிஇருக்கிறது. எனவே, இந்தப் பிரச்சினையில் மேலெழுந்தவாரியாகப் பார்க்கிறபோதே உரிமைப் பிரச்சினை இருக்கிறது என்கிற காரணத்தினால் நேரிடையாகவே இதை உரிமைக் குழுவிற்கு அனுப்பி நடவடிக்கை எடுக்க முடியும். இருந்தாலும், இன்னும் இந்த அவை, பத்திரிகையாளர்களிடத்திலே, தான் கொண்டிருக்கிற பெருந்தன்மையை விட்டுவிடவில்லை என்பதன் காரணமாக அந்தப் பத்திரிகை ஆசிரியருக்கு ''ஏன் உரிமைக் குழுவிற்கு இந்தப் பிரச்சினையை அனுப்பி, உரிய தக்க நடவடிக்கையை இந்தப் பத்திரிகையின் மீது எடுக்கக் கூடாது'' என்பதற்கான விளக்கம் கேட்டு அந்த விளக்கத்தைப் பெற்று, அவைக்குத் தெரிவிக்கிறேன் என்பதைத்தெரிவித்துக்கொள்கிறேன். இந்த எச்சரிக்கையைப் பத்திரிகையாளர்களும், 'பிரெஸ் அட்வைசரி கவுன்சில்' என்றிருக்கக்கூடிய இந்த அவையில் ஒரு அங்கமாக கருதப்பெறுகின்ற அந்தக் குழுவினரும் கடுமையாக எடுத்துக் கொள்ள வேண்டும் என்கிற வேண்டுகோளைப் பத்திரிகையாளர்களுக்கும் தெரிவித்து, இந்தப் பத்திரிகைக்கு விளக்கம் கேட்டு, விவரத்தை அவைக்கு அறிவிக்கிறேன் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி).

3. கவன ஈர்ப்பு.

(அ) இராமநாதபுரம் , மதுரை மற்றும் காமராஜர் மாவட்டங்களில் நிலவிவரும் வறட்சி நிலை குறித்து.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : அடுத்து, அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த கவன ஈர்ப்பு. திருவாளர்கள் வ. சத்தியமூர்த்தி மற்றும் சோ. பாலகிருஷ்ணன் ஆகியோர் ஒரே பொருள் குறித்த அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வு குறித்து கவன ஈர்ப்புத் தீர்மானம் கொடுத்துள்ளனர். அவர்களில் ஒருவர் மாண்புமிகு வருவாய்த்துறை அமைச்சர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டு வருவார். திரு. வ. சத்தியமூர்ததி.